ஒடுகத்தூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் : திருமதி.ம. எழிலரசி. பி.எஸ்.சி.,

ந.க.எண்..198 /2023 நாள். 04.03.2024

பொருள்: மனைப்பிரிவு – வேலூர் மாவட்டம் – அணைக்கட்டு வட்டம் – ஒடுகத்தூர் முதல் நிலை பேரூராட்சி சர்வே எண்.290/1சி–ல் 1.16 ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க – தொழில் நுட்ப அங்கீகாரம் வரப்பெற்றது – குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகரித்து உத்தரவு பிறப்பித்தல் – சார்பு

பார்வை :

1. திரு.விஜயரங்கன் (ம) இருவர் விண்ணப்பம் நாள் 12.04.2022
2. மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் மாவட்டம் ந.க.எண்.2261/2021/வே.மா3, நாள்.10.01.2022
3. திரு. விஜயரங்கன் மற்றும் இருவர் அவர்களால் செயல் அலுவலருக்கு வழங்கப்பட்ட சாலைகள், மூலை மூடக்கு மற்றும் பொது ஒதுக்கீடு தானப்பத்திர ஆவண எண். 779/2022, நாள்.28.03.2022 மற்றும் TANGEDCO (Transformer Yard) ஒதுக்கப்பட்ட இடத்தின் தானப்பத்திர ஆவண எண்.515/2022, நாள்.02.03.2022.
4. ஒடுகத்தூர் பேரூராட்சி மன்ற தீர்மன எண். 50 நாள் 13.05.2022
5. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் அவர்களின் கடித ந.க.எண் 2261/2021/வேமா.3 நாள் 13.04.2022
6. ஒடுகத்தூர் பேரூராட்சி மன்ற தீர்மன எண் 281 /2023 நாள் 29.09.2023
7. அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020
8. அரசாணை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(3) நாள் 09.12.2020
9. இவ்வலுலக கடித ந.க.எண் 198/2023 நாள் 19.06.2023
10. வட்டாட்சியர் , வட்டாட்சியர் அலுவலகம், அணைக்கட்டு அவர்களின் ஒ.மு.ஆ1/548/2021 நாள் 15.06.2021
11. அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(3) நாள் 04.05.2017
12. தொடர்புடைய ஆவணங்கள்

******

உத்திரவு:-

வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் முதல் நிலை பேரூரட்சி கிராம சர்வே எண்.290/1சி–ல் 1.16 ஏக்கர் பரப்பளவு இடத்தில் திரு.விஜயரங்கன் எண்.24எ, பாளையம்ரோடு, ராகவேந்திரா நகர், ஒடுகத்தூர், வேலூர்632103 மற்றும் திரு.ஆர்.முரளிதரன், திரு.ஜெ.சரவணன், என்பவர்களுக்கு சொந்தமான இடத்தல் மனைப்பிரிவு அமைப்பதற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

பார்வை 2ல் காணும் வேலூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடு/ சாலை/ பூங்கா இடங்களை பேரூராட்சிக்கு தானமாக வழங்கி பத்திர பதிவு செய்து பார்வை 3ல் காணும் தானப்பத்திரன்படி மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி குடியிருப்பு மனைப்பிரிவில் சாலை மேம்பாடு,

வடிகால் வசதி ஆகிய அடிப்படை வசதிகளை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து கொடுத்துள்ளார். தெரு விளக்கு வசதி மேற்கொள்ள மின் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை மனுதாரரால் இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து , மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கி பார்வை 5ல் காணும் கடிதத்தில் வரைபடத்தை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் விநியோக பைப்லைன் அமைத்தல் மற்றும் இதர கட்டணத்தினை மனுதாரரால் இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் , பார்வை 4 மற்றும் 6ல் காணும் இப்பேரூராட்சி மன்ற தீர்மானங்களில் மேற்படி மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மேற்படி சர்வே எண் சர்வே எண்.290/1சி–ல் 1.16 ஏக்கர் (4700 ச.மீ) பரப்பளவில் உள்ள நிலத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளப்படி 25 குடியிருப்பு மனைகள் அமைந்துள்ள மனைப்பிரிவாக அங்கீகரித்து இதன் முலம் உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. மேற்படி மனைப்பிரிவு அங்கீகாரத்தை உயர் அதிகாரிகள் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் அவர்கள் மூலம் ரத்து செய்ய உத்திரவு பிறப்பித்தால் உடனே மனைப்பிரிவு அங்கீகாரம் ரத்து செய்யப்படும்
2. இம்மனைப்பிரிவு சம்மந்தமாக பொது மக்களின் நன்மையை கருதி அவ்வப்போது பேரூராட்சியினால் பிறப்பிக்கப்படும் உத்திரவுகளுக்க மனைப்பிரிவுதாரர் கட்டுப்பட்டவராவார்.
3. தமிழக அரசு ஆணை எண் 130 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.06.1999 (அரசு ஆணை எண் 79 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 16.06.2000) அரசுக் கடிதம் எண் 26331/ ந.நி.99–8 நாள் 16.06.2000 ஆகியவற்றில் கண்டுள்ள அனைத்து சட்ட பிரிவுகளுக்கும் 1920ம் ஆண்டின் மாவட்ட நகராட்சிகள் சட்ட விதிகளுக்கும். 2023–ம் வருடத்திய தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகளுக்கும் மற்றும் 1994ம் வருடத்திய நகரமைப்பு சட்டப்பிரிவுகளின் மனைப்பிரிவு விதிமுறைகளுக்கும் மனைப்பிரிவு தாரர் கட்டுப்பட்டவராவார்.
4. இணை இயக்குநர்/ உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், வேலூர் அவர்களின் வரைபடத்திற்கு ம.வ./மா.ந.ஊ.அ (வே.மா) எண் 26/2022 என எண்ணிடப்பட்டும், ந.க.எண்.2261/2021/வே.மா.3, நாள்.13.04.2022ல் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் மனைப்பிரிவுதாரர் கட்டுப்பட்டவராவார்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்று மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலைஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி தானாக ரத்தாகிவிடும்.

6. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வலைரபடத்தை எந்த விதர மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுவப்படவேண்டும்
8. மனுதாரர் மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள், பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகளை ஆக்கிரமிப்பு ஏதும் செய்யக்கூடாது
9. இம்மனைபிரிவு அங்கீகாரத்திற்கு செலுத்தப்பட்ட தொகை குறித்து பிற்காலத்தில் தணிக்கை தடை ஏதும் ஏற்பட்டால், அதற்கு மனைபிரிவு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.

செயல் அலுவலர்
ஒடுகத்தூர் முதல் நிலை பேரூராட்சி
வேலூர் மாவட்டம்

பெறுநர்

திரு.விஜயரங்கன்,
திரு.ஆர்.முரளிதரன் மற்றும்
திரு.ஜெ.சரவணன்,
எண்.2.4எ, பாளையம்ரோடு,
ராகவேந்திரா நகர்,
ஒடுகத்தூர்,
வேலூர்632103

நகல்:

1) சார் பதிவாளர் அவர்கள், ஒடுகத்தூர்
2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் வேலூர் மண்டலம்

ஒடுகத்தூர் பேரூராட்சியில் 29.09.2023 நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான எண்.280-ன் உண்மை நகல்

முன்னிலை. திருமதி.பா.சத்தியாவதி

பொருள் எண். 13

ஒடுகத்தூர் முதல்நிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட விவரப்படி நகர் ஊரமைப்பு துறை மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டு சர்வே எண்.290/1C-ல் 1.16 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டுள்ளது. நகர ஊரமைப்பு துறை மூலம் இசைவு அளிக்கப்பட்ட மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளிக்க மன்ற பார்வைக்கு.

வ. எ ண்.	மனுதாரர் பெயர் மற்றும் விலாசம்	DTPCP கடித எண்	மனைப்பிரிவு அமைந்துள்ள இடம்	மனைப்பிரிவு அமைந்துள்ள சர்வே எண்.	பரப்பளவு (சமீ.)	பிளாட் எண்	Single Plot Regularization No.
1	திரு.விஜயரங்கன் (மு) இருவர்	ந.க.எண். 2261/2021/ வேம3, நாள். 13.04.2022	ஒடுகத்தூர்	290/1C	4700 சமீ	25	2261/2021

செயல் அலுவலர் குறிப்பு

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) வேலூர் அவர்களின் ந,க,எடண,2261.2021/வே.ம3 நாள்.13,04.2022 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் மனைப்பிரிவிற்கு உண்டான சாலை வசதி, குடிநீர் வசதி, தெருமின்விளக்கு வசதி, பொது இடம் ஒப்படைப்பு செய்தல் அனைத்தும் மனுதாரர் பூர்த்தி செய்யும் பட்சத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்க பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

தீர்மானம் எண். 280

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) வேலூர் அவர்களின் ந.க.எ;ண.2261.2021/வே.ம3 நாள்.13,04.2022 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்தும், மேலும் மனைப்பிரிவிற்கு உண்டான சாலை வசதி, குடிநீர் வசதி, தெருமின்விளக்கு வசதி, பொது இடம் ஒப்படைப்பு செய்தல் அனைத்தும் மனுதாரர் பூர்த்தி செய்து பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அலுவலகத்திற்கு தெரிவித்தால் நேரில் பார்வையிட்டு மனைப்பிரிவினை அங்கீகரிக்கலாம்.

B. Sathyavathi Baska

(ஒம்) திருமதி.பா.சத்தியாவதி
தலைவர்,
ஒடுகத்தூர் பேரூராட்சி.

ஒடுகத்தூர் முதல்நிலை பேரூராட்சி
தேதி: 01.11.2023
வேலூர் மாவட்டம்

/உண்மை நகல்/

01/11/2023

செயல் அலுவலர்,
ஒடுகத்தூர் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம்.

தலைவர்
பேரூராட்சி மன்றம்
ஒடுகத்தூர் - வே.மா.